மாலை முரசு

பக்கங்கள் 18+3

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 28 புதன்கிழமை 11.02.2026 | அதிர்வு 194

## யாழில் ரயில் மோதி வயோதிபர் மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் ரயில் மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். காங்கேசன்துறையில் இருந்து ஓமந்தை நோக்கி இன்று காலை

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# குற்றவாளிகளே தம்மைத்தாமே விசாரிக்கும் அவலம்




### அவசரகாலச் சட்டமே பொலிஸாரின் அராஜகத்துக்குக் காரணம்; அல்லைப்பிட்டி துப்பாக்கிச்சூடு குறித்து கஜேந்திரகுமார் காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

குற்றத்துடன் தொடர்புடையவர்களே அந்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் நிலைமைதான் இந்த நாட்டில் காணப்படுகின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

02

# அமரகீர்த்தி கொலை வழக்கு: 12 பேருக்கு மரண தண்டனை!



### கம்பஹா மேல் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

அரகலய என்றழைக்கப்படும் மக்கள் போராட்டத்தின்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல தாக்கிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் 12 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட

03

# திருகோணமலை புத்தர் சிலை விவகாரம்: 4 தேரர்கள் உட்பட 10 பேருக்கும் பிணை!

### நிபந்தனைகளை மீறினால் பிணை இரத்து என்று நீதிமன்றம் அறிவுறுத்து



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை டச்பே கடற்கரையில் சட்டவிரோத கட்டுமானம் அமைத்து புத்தர் சிலை வைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பலாங்கொட கஸ்ஸப்ப தேரர் உட்பட 4 தேரர்கள் மற்றும் 6 பொதுமக்கள் ஆகிய 10 பேருக்கும் திருகோணமலை குற்றவியல் மேல்நீதிமன்றம் இன்று பிணை வழங்கியது.

இன்று காலை இவ்வழக்கு நீதிவான் நீதிமன்றில் முதலில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

02

# வெறும் இயற்கைச் சீற்றமல்ல ‘டித்வா’; அது சமூகப் பாரபட்சத்தின் சாட்சியே!

## மலையக மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் வலியுறுத்து

‘டித்வா’ சூறாவளியால் ஏற்பட்ட பேரனர்த்தமானது இலங்கையில் கட்டமைப்பு ரீதியான இடைவெளிகளையும், சமத்துவமின்மையையும் வெளிப்படுத்தியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ – பிரான்சே தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் குறித்த மதிப்பீடுகளை விரைந்து முன்னெடுப்பதோடு, இதில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த நவம்பர் மாத இறுதியில் ஏற்பட்ட ‘டித்வா’ சூறாவளியால் மலையகப் பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்நிலையில், கடந்த வார இறுதியில் பதுளை மாவட்டத்துக்கு விஜயம் செய்து களநிலைவரங்களைப் பார்வையிட்ட பின்னர் வெளியிட்டுள்ள காணொளியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

‘டித்வா’ சூறாவளி இலங்கையைத் தாக்கி இரண்டு மாதங்கள் நிறைவடைந்துள்ளன. இந்தப் பேரனர்த்தத்தின் போது அரச அதிகாரிகள் ஆற்றிய அளப்பரிய சேவையையும், இலங்கை மக்கள் வெளிப்படுத்திய ஒற்றுமையையும் நாம் பாராட்டுகின்றோம். அத்துடன், பாதிப்புகளைக் குறைப்பதற்காகச் சர்வதேச சமூகமும் உடனடியாக உதவிகளை வழங்க முன்வந்தது.

எது எவ்வாறெனினும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இன்னும் பல தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன. குறிப்பாக, பாதுகாப்பான குடியிருப்பு வசதிகள், தூய்மையான குடிதண்ணீர் மற்றும் வாழ்வாதார உறுதிப்பாடு போன்ற விடயங்களில் நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையிலான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

இந்த அனர்த்தம் சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. எனவே, தேவைகள் குறித்த மதிப்பீட்டின் போது மலையக மக்களுக்கு விசேட முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.” – என்றார்.




## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழில் ரயில்...

புறப்பட்ட யாழ். ராணி ரயில், மல்லாகம் பகுதியில் மேற்படி வயோதிபர் மீது மோதியுள்ளது.

உயிரிழந்த வயோதிபரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### திருகோணமலை...

தொடர்ந்து எதிராளிகளுக்கான பிணைக் கோரிக்கைக்கான மனு தொடர்பான விசாரணை திருகோணமலை குற்றவியல் மேல்நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதையடுத்து 10 எதிராளிகளையும் பிணையில் விடுப்பதற்கான உத்தரவு மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம். அப்துல்லாவினால் வழங்கப்பட்டது.

இதன்படி மீளவும் நீதிவான் நீதிமன்றில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மேல் நீதிமன்ற பிணை வழங்கல் உத்தரவுக்கு இணங்க எதிராளிகள் விடுவிக்கப்பட்டனர்.

இதன்படி பலாங்கொட கஸ்ஸப்ப தேரர், கல்யாணவன்ஸ திஸ்ஸ தேரர், சுகித்த வன்ஸ திஸ்ஸ தேரர், நந்த தேரர் ஆகிய 4 தேரர்களும், தீபானி வியனகே, விது ரங்க லொக்கு கலப்பதி, எல்.ரீ.பெரேரா, பியல் பிறேமசிறி, குணதிலகே தெக்கும் துலார குணதிலக்க, திக்மன் ஜெயந்த ஆகிய 6 பொதுமக்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தலா 10 ஆயிரம் ரூபா காசுப் பிணை மற்றும் ரூபா 10 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளை மேற்படி 10 எதிராளிகளும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன் அனைத்து எதிராளிகளும் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறும் அனைத்து வழக்கு விசாரணைகளுக்கும் தவறாது சமூகமளிக்க வேண்டும், சாட்சிகளைப் பயமுறுத்தக் கூடாது, பிரதேசத்தின் பொது அமைதி மற்றும் சமய சகவாழ்வுக்கு எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்தக்கூடாது போன்ற நிபந்தனைகளும் மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது.

இந்த நிபந்தையில் ஒன்றோ அனைத்துமோ எதிராளிகளால் மீறப்பட்டால் பிணை உடனடியாக இடைநிறுத்தப்பட்டு விளக்கமறியல் நடைமுறைக்கு வரும் என்றும் மேல் நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியது.

### குற்றவாளிகளே...

யாழ். அல்லைப்பிட்டி பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற வாகனம் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“போரற்ற சூழலில், யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி வீதிகளில் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழலில் வாகனத்தை நிறுத்தாமல் சென்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு அதனை நியாயப்படுத்த முடியாது.

வாகனம் ஒன்றை நிறுத்துமாறு கட்டளையிட்டு, அவர்கள் கட்டளையை மீறிச் சென்றால் வாகனத்தை நிறுத்த வைப்பதற்கான நடவடிக்கையைத்தான் பொலிஸார் மேற்கொள்ள முடியுமே தவிர சாரதியைச் சுட்டு கொல்ல முடியாது.

வாகனத்தில் மாட்டின் சாணகம் இருந்ததாகப் பொலிஸார் காண்பித்தமையைப் பார்த்த வேளை, அது கொண்டு வந்து கொட்டப்பட்டது போன்றே காணப்பட்டது. அதனை உறுதிப்படுத்தும் வகையில் வாகனத்தில் இருந்து சுமார் 50 அடி தூரத்தில் பொலித்தீன் பை ஒன்றில் சாணகம் காணப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் நீதியான விசாரணைகளை முன்னெடுப்பார்களா என்பதே சந்தேகமாக உள்ளது.

நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ளமையால்தான் இவ்வாறான செயல்களில் பொலிஸார் ஈடுபடுகின்றனர். அவசரகாலச் சட்டம் ஊடாகப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. அதனூடாகவே கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கில் அவசரகாலச் சட்டத்தின் ஊடாக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டு தம்மைப் பாதுகாத்தனர்.

ஒரு குற்றவாளியாக இருந்தாலும் பொலிஸார் சுட்டுப் படுகொலை செய்கின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது. நீதியான விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும்.

ஆனால் எங்கள் நாட்டில் குற்றம் சாட்டப்பட்டவர்களே தம் மீதான குற்றச்சாட்டை விசாரிக்கும் துரதிஷ்டவசமான நிலைமை காணப்படுகின்றது. குற்றம் செய்ததாகக் கூறப்படும் பொலிஸாரே இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.” – என்றார்.

# வாக்குறுதிகள் காற்றில்; அடக்குமுறை ஆட்சியில்!

## ‘திசைகாட்டி’ அரசைச் சாடும் ‘மொட்டு’




தேசிய மக்கள் சக்தி அரசு, ஆட்சிக்கு வரும்போது வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணாகச் செயற்படுவதோடு, மக்களின் ஜனநாயக ரீதியான போராட்டங்களை அடக்குமுறை மூலம் ஒடுக்கி வருகின்றது என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஜானக வக்கும்புர குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“மக்கள் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க வீதியில் இறங்கிப் போராடத் தேவையில்லை எனக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசு, இன்று மக்களை ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக வந்து போராடும் நிலைக்குத் தள்ளிவிட்டது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் தற்போதைய அரசின் சர்வாதிகாரப் போக்கினால் முடக்கப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், போராட்டங்களை முன்னெடுப்பதற்கெனத் தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அன்று போராட்டக்காரர்கள் பல மாதங்களாக அங்கேயே தங்கியிருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்த அனுமதிக்கப்பட்டனர். ஆனால், இன்று மழையில் நனையும் போராட்டக்காரர்களுக்குக் கூடத் தங்குவதற்கு இடமளிக்கப் பொலிஸார் மறுப்பது அரசின் மனிதாபிமானமற்ற போக்கையே காட்டுகின்றது.” – என்றார்.

எதிர்க்கட்சியினர் மீது வீண் பழிகளைச் சுமத்தித் தப்பிக்க முயல வேண்டாம் என அரசுக்கு அறிவுறுத்திய அவர், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற முன்வருமாறும் கேட்டுக் கொண்டார்.

# விசாரணைக்காக சபாநாயகர் பதவி விலகத் தேவையில்லை

## ஆளுங்கட்சி திட்டவட்டம்



இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும், சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தனது பதவியிலிருந்து விலக வேண்டிய அவசியம் இல்லை என்று தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் வைத்தியர் நிஹால் அபேசிங்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

சபாநாயகருக்கு எதிரான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு வசதியாக அவரைப் பதவியிலிருந்து விலகுமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இது குறித்து ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழு ஏதேனும் தீர்மானம் எடுத்துள்ளதா என ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வேறு எவராவது, அத்தகைய விசாரணைகளுக்காகத் தமது பதவிகளைத் துறந்துள்ளனரா? அவ்வாறான நடைமுறை எதுவும் இதற்கு முன்னர் பின்பற்றப்படவில்லை.” – என்றார்.

சபாநாயகர் பதவியில் நீடிப்பது விசாரணைகளுக்கு எவ்வித தடையையும் ஏற்படுத்தாது என்று வலியுறுத்திய அவர், ஆணைக்குழு தனது விசாரணைகளை எவ்வித இடையூறுமின்றி சுயாதீனமாகவும் தாராளமாகவும் முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் மேலும் குறிப்பிட்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

அமரகீர்த்தி கொலை...

12 பேருக்கே கம்பஹா மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் மேற்படி தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 41 பேருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. எனினும், 37 பேர்தான் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்கள்.

மூவரடங்கிய நீதிபதிகள் குழாமில் இரு நீதிபத்திகள், 12 பேருக்கும் மரண தண்டனை விதித்தனர். ஒருவர் 37 பேரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

அத்துடன், மேலும் நால்வருக்கு 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 21 பேர் வழக்கிலிருந்து நிரபராதிகளாகக் கருதி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம், காலிமுகத்திடலில் அறவழியில் போராடிக்கொண்டிருந்த போராட்டக்காரர்கள் மீது ராஜபக்ஷ அணியைச் சேர்ந்தவர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து போராட்டக்காரர்களுக்கு ஆதரவாகப் பலரும் களமிறங்கினார்கள். நாடு முழுவதும் வன்முறையும் வெடித்தது.

இந்நிலையில்நிட்டம்புவநகரில்வைத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொலனறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமரகீர்த்தி அத்துகோரல மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் கொலை செய்யப்பட்டனர்.

கொழும்பில் இருந்து தமது ஊர் நோக்கிச் செல்லும் வழியிலேயே குழுவொன்றினால் அவர்கள் தாக்கப்பட்டனர்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# இழப்பீடு தருமா பிரிட்டன்?

இலங்கை தனது முன்னாள் காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து உயிர் மற்றும் சொத்து இழப்புகளுக்கு இழப்பீடு கோரும் அதே வேளையில், நாட்டிலிருந்து திருடப்பட்ட கலைப் பொருள்களைத் திருப்பித் தரும்படியும் வலியுறுத்தும் என்று வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

பல நூற்றாண்டு காலனித்துவ ஆட்சியின் போது நாட்டிற்கு ஏற்பட்ட இழப்புகள் மற்றும் சேதங்களுக்கு ஈடுசெய்யும்வகையில்இக்கோரிக்கை முன்வைக்கப்படும் என்றார் அவர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக அமைச்சர் ஹேரத் இதனைத் தெரிவித்தார். ஆபிரிக்காவில் உள்ள பல காலனித்துவத்திற்குப் பிந்தைய நாடுகளுடன் இலங்கை அரசாங்கமும் இணைந்து, தங்கள் முன்னாள் காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து இழப்பீடு கோர வேண்டும் என்று விஜித ஹேரத் பரிந்துரைத்தார்.

போர்த்துக்கல் மற்றும் நெதர்லாந்து (ஒல்லாந்து) அரசாங்கங்கள் இலங்கைத் தீவின் சில பகுதிகளை ஆட்சி செய்த காலத்தில் இலங்கையிலிருந்து அபகரிக்கப்பட்ட கலைப்பொருள்களை திருப்பித் தர ஒப்புக்கொண்டன என வெளியுறவு அமைச்சர் குறிப்பிட்டார். நெதர்லாந்து ஏற்கனவே முன்னர் திருடப்பட்ட கலைப் பொருள்களை இரண்டு சந்தர்ப்பங்களில் திருப்பித் தந்துள்ளது. மீதமுள்ளவற்றையும் எதிர்காலத்தில் திருப்பித் தர ஒப்புக்கொண்டுள்ளதாக அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் இத்தகைய கோரிக்கை ஒன்றை பிரிட்டனிடம் முன்வைக்க முடியும் என்றால் - அதன் மூலம் உரிய இழப்பீடு பெற இயலும் என்றால் - இதே போன்ற மிக முக்கியமான கோரிக்கை ஒன்றை இலங்கைத் தீவின் தமிழர் தேசமும் காலனித்துவ ஆட்சியாளர்களான பிரிட்டனிடம் வலியுறுத்தி முன் வைக்க முடியும்.

இலங்கைத் தீவில் தமிழர் தேசத்தின் இறைமை பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கீசர்கள் தீவுக்குள் காலடி எடுத்து வைக்கும் வரை தனித்துவமாகவும் தனி உரித்துடனும் பேணப்பட்டு வந்தது.

தமிழர் தேசத்தை முதலில் போர்த்துக்கீசரும், பின்னர் அவர்களிடமிருந்து ஒல்லாந்தரும், அதைத் தொடர்ந்து ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயரும் கைப்பற்றினார்கள்.

ஒல்லாந்தரையும் போர்த்துக்கீசரையும் போல ஆங்கிலேயரும் ஆரம்பத்தில் தமிழர் தேசத்தைத் தனியான ஆளுநர் மூலம் தனித்தே ஆண்ட போதும், 1832 இல் தங்களுடைய நிர்வாக வசதிக்காக இலங்கை தீவின் தமிழர் தேசத்தையும் சிங்களவர் தேசத்தையும் ஒன்றிணைத்து ஒரே ஆளுநரின் கீழ் ஆட்சியை தொடர்ந்த பின்னர், 1948 இல் தமிழர் தேசத்தின் இறைமையையும் சிங்கள தேசத்துடன் இணைத்து பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் ஒப்படைத்துச் சென்றமைதான் இன்று தமிழர் தேசத்தின் இந்த அவல நிலைக்குக் காரணம்.

அந்த நடவடிக்கையால் தமிழர் தேசத்துக்கு நேர்ந்த பேரவலத்துக்கு வெள்ளைக்கார ஆட்சியாளர்களிடமிருந்து தமிழர்கள் - தமிழர் தேசம் - ஏன் உத்தியோக பூர்வமாக இழப்பீடு கோரக் கூடாது?



# நீருக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 லட்சம் மில்லி லீற்றர் கோடா மீட்பு!

## மட்டக்களப்பில் சம்பவம் மூவர் கைது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பில் நீருக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 லட்சம் மில்லி லீற்றர் கோடா 50 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 8 பரல்கள், 2 கலன்கள் என்பனவும் மீட்கப்பட்டள்ளன.

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவிலங்கத்துறை களப்பு பகுதியை அண்டிய வாவியில் மறைத்து வைக்கப்பட்ட 14 லட்சம் மில்லி லீட்டர் கோடா மற்றும் 50 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் மூன்று சந்தேக நபர்களை மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. திங்கட்கிழமை மாலை ஆறு மணி முதல் செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆறு மணி வரை இச்சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவு விசேட பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த பகுதியில் சோதனை நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது ஆரையம்பதியில் இருவர் மற்றும் மாவிலங்க துறையை சேர்ந்த ஒருவருமாக சந்தேக நபர்களை கைது செய்யப்பட்டுள்ளனர்.

14 லட்சம் மில்லி லீற்றர் கோடா, 50 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு, கோடா பரல்கள், கசிப்பு வடிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கலன்களும் என்பனவும் மீட்கப்பட்டன என்று மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர்கள், கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களுடன் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக் கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.







# கல்முனை பகுதியில் திடீர் சோதனை 50 இற்கு மேற்பட்டோருக்கு நடவடிக்கை!

(பாறுக் ஷிஹான்)

போதைப் பொருள்கள் கடத்தல்கள் மற்றும் சட்டத்தை நிலைநாட்டும் முகமான கிளின் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டம், கல்முனை பிராந்தியத்தில் பொலிஸாரின் விசேட திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 50 இற்கும் அதிகமானோருக்குச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சோதனை நடவடிக்கையானது திங்கட்கிழமை இரவு கல்முனை பிரதான பஸ் நிலையத்தின் முன்பாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தர ஆலோசனையில் அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டார கஸ்தூரி ஆராய்ச்சி நெறிப்படுத்தலில் அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் பணிப்புரைக்கமைய மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் திடீர் சோதனை நடவடிக்கையில் கல்முனை, சவளைக்கடை பொலிஸ் நிலைய பொலிஸார் இணைந்து கொண்டனர். சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கனரக வாகனங்கள் கட்டங்கட்டமாக இடைமறிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டன. அத்துடன் வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகள் பொலிஸாரால் வழங்கப்பட்டன.

இரவில் பயணம் மேற்கொள்ளும் கல்முனை கொழும்பு குளிருட்டப்பட்ட பஸ்களின் வழித்தட பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை பொதுப்போக்குவரத்து சட்டங்களை மீறும் நபர்கள், சட்ட விரோத கடத்தல்களுக்குத் துணை நிற்கும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






## மருதமுனை பெரிய நீலாவணையில்

# சுற்றுச்சூழல் சோதனையை தீவிரப்படுத்த நடவடிக்கை!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்தியத்தில் நிலவும் காலநிலை மாற்றத்தைத் தொடர்ந்து கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட மருதமுனை நீலாவணை பகுதிகளில் அதிகரித்து காணப்படும் டெங்கு நோய் தாக்கத்தில் இருந்து பொது மக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்யவும் டெங்கு நோய்களின் பரவலை கட்டுப்படுத்தவும் ஒருங்கிணைந்த நடவடிக்கை மருதமுனை பெரிய நீலாவணை பிரதேசத்தில் புதன்கிழமை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் விசேட அறிவுறுத்தலின் பேரில் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்தியர் எம்.ஐ.றிஸ்னீன் முத் வழிகாட்டலின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளபடவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.பி.மசூத் தலைமையில் டெங்கு ஒருங்கிணைப்பு கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது பல துறைசார் உத்தியோகத்தர்களதும் பங்கேற்றலுடன் கருத்துப்பரிமாறல்கள், ஆளணி பங்களிப்பு, டெங்கு நோய் கட்டுப்பாடு தொடர்பில் ஆராயப்பட்டது.

கல்முனை பிரதேச செயலாளர், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி, கல்முனை தெற்கு பதில் சுகாதார வைத்திய அதிகாரி, சமூக நல விசேட வைத்தியர், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், நுளம்பு கட்டுப்பாட்டுக் கள உதவியாளர்கள், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், கல்முனை பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்தவும் ஒருங்கிணைந்த நடவடிக்கையில் பெரிய நீலாவணை மருதமுனை பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் குழுக்களாகப் பிரிந்து அதிகாரிகள் கடமையாற்றுவதுடன் வெற்றுக் காணிகள் வீடு உள்ளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் கட்டட இடிபாடுகள் ஆகியவற்றை தீவிரமாகச் சோதனை செய்யவுள்ளனர்.

இதன்போது நுளம்பு பெருகக் கூடியவகையில் நீர் தேங்கி நிற்கும் கொள்கலன்கள், பயன்படுத்தப்படாத டயர்கள் உள்ளிட்ட பொருள்கள் உடனடியாக அகற்றப்படவுள்ளன.

சுற்றுச் சூழலை மிகவும் அசுத்தமாகவும் டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் வைத்திருப்பவர்களுக்குச் சிவப்பு எச்சரிக்கை வழங்கப்படவுள்ளது. அத்துடன் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

டெங்கு நோயின் ஆபத்துக்கள் அதன் அறிகுறிகள் மற்றும் நோய்த் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து இதன்போது பொது மக்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்படவுள்ளன.





# கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் அடிப்படை உயிர்காக்கும் திறன் பயிற்சி!

**(நூருல் ஹுதா உமர்)**

அவசர சூழ்நிலைகளில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு வருகைதரும் நோயாளர்களின் உயிர் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தும் நோக்குடன், அடிப்படை உயிர் காக்கும் திறன் பயிற்சியின் நான்காம் கட்டமாக நேற்று வைத்தியசாலையில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி, வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எல். எம்.றிபாஸின் வழிகாட்டலின் கீழ் நடத்தப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார சேவை உதவியாளர்கள் இதில் பங்கேற்றனர்.

அவசர நிலைகளில் நோயாளிகளுக்கு உடனடி மற்றும் திறமையான சிகிச்சை வழங்கும் வகையில், உயிர்காக்கும் அடிப்படை நுட்பங்கள், செய்முறை விளக்கங்களுடன் இந்தப் பயிற்சியில் கற்பிக்கப்பட்டன.

இதன்மூலம் வைத்தியசாலையின் சேவைத் தரம் மேலும் மேம்படுவதோடு, அவசர மருத்துவ சேவைகளில் நோயாளிகளின் உயிர் பாதுகாப்பை உறுதி செய்வதில் இப்பயிற்சி ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# முன்பள்ளிக்கல்வி தேசியமயமாக்கப்படும் வரை ஆசிரியர், மாணவர் நலன் பேணப்பட வேண்டும்

## கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் சச்சிதானந்தன் தெரிவிப்பு

**(த.சுபேசன்)**

இலங்கையில் முன்பள்ளிக் கல்வி தேசிய மயமாக்கப்படும்வரை முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடைய நலன் பேணப்பட வேண்டும் என்று கல்வி அபிவிருத்திக் குழுமத்தினுடைய காப்பாளர் நடராசா சச்சிதானந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் 38 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தமிழ் மொழியில் என்.வி.கியூ. எல்-5 பயிற்சி வழங்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு ஆங்கில மொழியில் பரீட்சை நடத்திய காரணத்தால் 24 இற்கும் மேற்பட்ட ஆசிரியைகள் பரீட்சையை வெளிநடப்புச் செய்துள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியைகள் அரச மட்டத்துக்குத் தமக்கு ஏற்பட்ட அவல நிலையை எடுத்துச் சென்ற போதிலும், அவர்களுக்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை. இலங்கையில் தமிழ் மொழியில் முன்பள்ளி கல்வியை முன்னெடுக்கும் ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழியில் பரீட்சை எதற்கு என்பது பலருடைய கேள்வியாகவும் உள்ளது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 50 வருடங்களுக்கும் மேலாக முன்பள்ளிகள் பல தனியாரினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

முன்பள்ளிகளின் பௌதீக நிலைமை, ஆசிரியர்களின் தராதரம், வேதனம், விடுமுறை, ஓய்வூதியம் மற்றும் பிள்ளைகளின் சத்துணவுப் பகிர்வு ஆகியவும் சீரான நிலைமையில் இல்லை.



ஆசிரியர்களின் தராதரத்தை உயர்த்தும் முனைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகம் ஆகியன முன்பள்ளி ஆசிரியர்களுக்கு டிப்ளோமா பயிற்சியை வழங்கி வருகின்றன.

வடக்கு மாகாணத்தில் சுமார் 3000 முன்பள்ளி ஆசிரியர்கள் பணியில் உள்ளனர்.

இவர்களில் 300 ஆசிரியர்கள் வரையில் முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா பயிற்சியை இரண்டு பல்கலைக்கழகங்களிலும் பெறுவதற்கு கல்வி அபிவிருத்திக் குழுமம் நிதி அனுசரணையை வழங்கியுள்ளது.

மீதமான 2700 ஆசிரியர்களிடம் தகுந்த தராதரம் இல்லாதது கவலைக்குரிய விடயம்.

இந்த நிலையில் டிப்ளோமா கல்வியை பெற முடியாத ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் என்.வி.கியூ.எல்-4 மற்றும் என்.வி.கியூ.எல்- 5 பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில், அதற்கான நிதி அனுசரணையை கல்வி அபிவிருத்திக் குழுமம் வழங்கியது. கற்கையும் தமிழ் மொழியில் நடைபெற்றது.

இருப்பினும், பயிற்சி முடிந்து பரீட்சை நடப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னதாக, பரீட்சை ஆங்கில மொழியில் மட்டும் நடைபெறும் என்று தொழில்நுட்பவியல் கல்லூரி நிர்வாகம் அறிவித்திருந்தமை ஆசிரியர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

என்.வி.கியூ.எல்-3 மற்றும் என்.வி.கியூ.எல்- 4 பரீட்சைகளை தமிழ் மொழியிலும், என்.வி.கியூ.எல்-5 பரீட்சையை ஆங்கில மொழியிலும் நடத்துவது நாட்டின் தேசியக் கொள்கைக்கு உட்பட்டதா என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்வது நல்லது.

முன்பள்ளிக் கல்வி தேசியமயமாக்கப்படும்வரை நிலைமை மோசமாகாமல் பார்த்துக்கொள்வது சம்பந்தப்பட்ட அரச இலாகாக்களின் பொறுப்பாகும்.- என்றார்.




# மன்னாரில் சில பாதைகள் திறக்கப்படாமைக்கு தொல்லியல் பாதுகாப்பே காரணமாக உள்ளது!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் இருந்து புத்தளம் செல்வதற்கான வில்பத்து வனப் பகுதியை ஒட்டியுள்ள பாதையைத் திறப்பதில் உள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, அதற்கு மாற்றாக பயன்படுத்தக் கூடிய மாற்றுப் பாதைகள் குறித்த பரிந்துரைகளை முன்வைப்பதே தற்போதைய அரசின் நோக்கம் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட அபிவிருத்தி குழு கூட்டத்தில் மன்னாரில் இருந்து இலவன் குளம் ஊடாக புத்தளம் செல்லும் பாதை தொடர்பான சர்ச்சை குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில பாதைகள் பொது மக்கள் பயன்பாட்டுக்காக இதுவரை திறக்கப்படாமல் இருப்பதற்குச் சுற்றுச் சூழல் மற்றும் தொல்லியல் பாதுகாப்பு காரணங்கள் உள்ளன. இந்தப் பாதைகள் திறக்கப்படாததால் மன்னார் மாவட்ட மக்களுக்கு பெரும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளது.

அதே நேரத்தில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தொல்லியல் சட்ட வரம்புகள் காரணமாகச் சில பாதைகள் திறக்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்த விவகாரம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட சுற்றுச்சூழல் அதிகாரிகள் மக்களின் கவலைகளை அறிந்துள்ளனர். எனினும் அதற்கான சட்டம் மற்றும் நிர்வாக வரம்புகள் உள்ளன.

இந்த நிலைமை காரணமாக, வில்பத்து வனப் பகுதியை ஒட்டியுள்ள இந்தப் பாதைக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய மாற்றுப் பாதைகள் குறித்து பரிந்துரைகளை முன்வைப்பதே எமது தற்போதைய நோக்கமாக உள்ளது.

இதற்காக சுற்றுச்சூழல் அமைச்சும் எமது அமைச்சும் இணைந்து எதிர்காலத்தில் விரிவான கலந்துரையாடல்களை நடத்தவுள்ளோம்.

இந்த விடயத்தில் சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்களின் நிலைப்பாடுகள் காரணமாகச் சில தடைகள் இருப்பதும் உண்மை. இருப்பினும், பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் சட்ட வரம்புகளையும் மதித்து தீர்வு காண வேண்டிய அவசியம் உள்ளது.

எதிர்காலத்தில் இந்த விவகாரம் தொடர்பான முடிவுகள், பொது மக்கள் மத்தியஸ்த கலந்துரையாடல்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பரிந்துரைகள் மற்றும் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும்.

அத்துடன் நீதிமன்ற உத்தரவுகளை முழுமையாக மதித்து, அதற்கிணங்க எமது நடவடிக்கைகள் அமையும்.

இந்த விவகாரம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட சுற்றுச்சூழல் அதிகாரிகள் பொது மக்களின் கவலைகளை அறிந்துள்ளதுடன், அதற்கான சட்ட மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகள் உள்ளன என்பதும் அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

வில்பத்து வனப் பகுதியை ஒட்டியுள்ள பாதையைத் திறப்பதில் உள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, அதற்கு மாற்றாக பயன்படுத்தக்கூடிய மாற்றுப் பாதைகள் குறித்த பரிந்துரைகளை முன்வைப்பதே தற்போதைய அரசின் நோக்கம்.

இதற்குச் சுற்றுச்சூழல் அமைச்சும் சம்பந்தப்பட்ட அமைச்சும் இணைந்து எதிர்காலத்தில் விரிவான கலந்துரையாடல்களை நடத்தவுள்ளது.

சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்களின் நிலைப்பாடுகள் காரணமாக சில தடைகள் இருப்பதும் உண்மை.

எனினும், பொது மக்களின் நலனை முதன்மையாகக் கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் சட்ட வரம்புகளையும் மதித்து தீர்வு காண வேண்டிய அவசியம் உள்ளது.

இந்த விவகாரம் தொடர்பான எதிர்கால முடிவுகள், பொது மக்கள் மத்தியஸ்தக் கலந்துரையாடல்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பரிந்துரைகள் மற்றும் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் என்றும், நீதிமன்ற உத்தரவுகளை முழுமையாக மதித்து அதற்கிணங்க அரசின் நடவடிக்கைகள் அமையும் என்றும் அமைச்சர் விமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.





# உயர்தரம் கற்கும் 300 மாணவர்களுக்கு இந்திய தூதகம் ஊடாகப் புலமைப்பரிசில்

(அஷ்ரப் ஏ சமத்)

இந்திய தூதரகத்தின் ஊடாக, கல்வியமைச்சில் வைத்து க.பொ.த. உயர்தரம் கற்கும் 300 மாணவர்களுக் கான புலமைப்பரிசில் திட்டம் வழங் கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம மந்திரியும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய, பிரதிக் கல்வி உயர்கல்வி அமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன, இந்திய பதில் தூதர் கலா நிதி சந்தியா ஜல் பண்டே ஆகியோர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு மாணவருக்கும் மாதாந்தம் 2500 ரூபா வழங்கப்படும். இவர்கள் சிறந்த பெறுபேறுகள் அடிப் படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண வர்கள் ஆவர். ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து 6 மாணவர்கள் தேர்ந்தெடுக கப்பட்டுள்ளனர்.

இதனை விட இந்தியா சென்று உயர் கல்வி மருத்துவம், பொறியியல், கலைப் பட்டப் படிப்பை பயில்வதற்கும் இந்தியா 210 புலமைப் பரிசில் திட்டத்தை வருடா வருடம் இலங்கைக்கு வழங்கி வருகிறது. அத்துடன் 400 பேர் பணம் செலுத்தி இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங் களில் கற்பதற்கான சந்தர்ப்பம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனை விட இலங்கையில் உள்ள அரச சேவையாளர்கள் 1500 பேர் இந்தியா சென்று அவரவர்கள் துறை சம்பந்தப்பட்ட பயிற்சிகளைப் பெறவும், இந்தியா இலங்கைக்கு வசதிகளை வழங்கி வருகிறது என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.







# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சங்கமப் பொங்கல் விழா நிகழ்வுகள்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை, தென்கிழக்குப் பல் கலைக் ணகழகத்தின் கலை கலாசார பீட மாணவர் பேரவையின் ஏற்பாட்டில், சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையிலான சங்கமப் பொங்கல் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

இந்த விழாவுக்குக் கலை கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தலைமை வகித்ததுடன், பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன் விசேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதனுடன் பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களின் பீடாதிபதிகள், பதில் பதிவாளர், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரை யாளர்கள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு விழாவை மெருகூட்டினர்.

விழாவுக்கு வருகைதந்த அதிதிகள் பாரம்பரிய மேள வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டு விழா மேடைக்கு அழைத்துவரப்பட்டனர்.

விழாவின் ஆரம்ப நிகழ்வாக மும்மத அனுஷ்டானங்கள் இடம்பெற்றன. வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. இவ்வர



வேற்புரையை மாணவர் பேரவை பிரதிநிதி எஸ்.எம். சஹான் நிகழ்த் தினார்.


தலைமை உரையாற்றிய பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் நிகழ்த் தினார்.

மொழிகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் என். சுபராஜ், பொங்கல் திருவிழாவின் பாரம்பரியம் மற்றும் அதன் மகிமைகள் குறித்து சிறப்புரை யாற்றினார்.

அதேநேரம், பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும் சமூகவியல் பேராசிரியருமான றமீஸ் அபூபக்கர், மாணவர்களை மகிழ்விக்கும் வகையில் பாடல் இசைத்தார்.

இவ்விழாவை அலங்கரிக்கும் வகை யில் மாணவர்களின் இசை, நடன நிகழ்ச்சிகள் பலவும் அரங்கேற்றப் பட்டன.








# பெங்களூரில் உலக யோகா சாம்பியன்ஷிப்: இரண்டாம் இடம் பிடித்தது இலங்கை அணி!

இந்தியா, பெங்களூரில் இடம்பெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான சர்வதேச யோகா கூட்டமைப்பின் (International Union Yoga Federation) உலக யோகா சாம்பியன்ஷிப் போட்டியில், இலங்கை அணி மிகச்சிறந்த திறமையை வெளிப்படுத்தி ஒட்டுமொத்தப் போட்டியில் இரண்டாம் இடத்தை (Runner-up) வென்றுள்ளது.

இலங்கை யோகா கூட்டமைப்பின் சார்பில் பங்கேற்ற வீரர்கள், சர்வதேச தரத்திலான போட்டிகளில் பல தங்க பதக்கங்களை வென்று அசத்தினர்.

இறுதிப் புள்ளிப் பட்டியலின் அடிப்படையில், இலங்கை அணி இரண்டாம் இடத்துக்கான வெற்றிக் கேடயத்தைக் கைப்பற்றி நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளது. இந்த வெற்றியானது இலங்கையில் யோகா கலையை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும் என்று விளையாட்டு ஆர்வலர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.






# பங்களாதேஷ் 2026 தேர்தல்: இளம் தலைமுறையின் கனவு நனவாகுமா?

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா.

(ஷேக் ஹசீனாவின் ஆட்சி 2024 இல் வீழ்த்தப்பட்ட பிறகு, இடைக்கால தலைவர் முஹம்மது யூனுஸ் தலைமையில் நடைபெறும் இந்த தேர்தலில், தாரிக் ரஹ்மான் தலைமையிலான பிஎன்பி (BNP) மற்றும் ஜமாஅத்-இ-இஸ்லாமி (Jamaat-e-Islami) ஆகிய கட்சி களிடையே கடும் போட்டி நிலவுகிறது.)

பங்களாதேஷில் 15 ஆண்டுகால ஷேக் ஹசீனாவின் ஆட்சியை வீழ்த்திய மாணவர் தலைமையிலான புரட்சிக்குப் பிறகு, நாளை புதிய பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், தேர்தல் களம் தற்போது பங்களாதேஷ் தேசியக் கட்சி (BNP) மற்றும் ஜமாத்-இ-இஸ்லாமி தலைமையிலான 11 கட்சிக் கூட்டணி ஆகியவற்றுக்கு இடையேயான இருமுனைப் போட்டியாக மாறியுள்ளது.

மொத்தமுள்ள 12.7 கோடி வாக்காளர்களில் சுமார் 44 சதவீதத்தினர் 18 முதல் 37 வயதுக்குட்பட்டவர்கள். இவர்களே தேர்தலின் தலைவிதியைத் தீர்மானிப்பார்கள் எனக் கருதப்படுகிறது. இந்த தேர்தலில், மொத்தம் உள்ள 300 இடங்களுக்கு 2000 இற்கும் மேற்பட்டோர் போட்டியிட உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகின்றன.

### ஷேக் ஹசீனா ஆட்சி வீழ்ச்சி

இந்தத் தேர்தலில் 50 கட்சிகள் பங்கேற்பதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் இந்த பொதுத் தேர்தலைப் பார்வையிட அந்த நாட்டு அரசு இந்தியா உட்படப் பல நாடுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. ஹசீனா ஆட்சியில் இருந்து வெளியேறிய பின், பங்களாதேஷ் தேசியக் கட்சி தலைவர் தாரிக் ரஹ்மான் 17 ஆண்டு கால நாடு கடத்தப்பட்ட வாழ்க்கைக்குப் பிறகு நாடு திரும்பி, தீவிரப் பிரசாரத்தில் தற்போது ஈடுபட்டுள்ளார்.

ஷேக் ஹசீனாவின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு, இடைக்கால தலைவர் முஹம்மது யூனுஸ் தலைமையில் நடைபெறும் இந்த தேர்தலில், தாரிக் ரஹ்மான் தலைமையிலான பிஎன்பி (BNP) மற்றும் ஜமாஅத்-இ-இஸ்லாமி (Jamaat-e-Islami) ஆகிய கட்சி களிடையே கடும் போட்டி நிலவுகிறது.

இந்தியாவுடன் தற்போதைய இடைக்கால அரசின் உறவு மிகவும் மோசமடைந்துள்ள நிலையில், புதிய ஆட்சி அமையவுள்ள கட்சிகளின் இந்தியா குறித்த நிலைப்பாடு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக வங்கதேசம் என்ற முழக்கத்துடன் பிஎன்பி கட்சித் தலைவர் தாரிக் ரஹ்மான் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளார். இதில் அவர் மற்ற நாடுகளை எஜமானர்களாக அல்லாமல் நண்பர்களாக மட்டுமே கருதுவோம் என்று உறுதி அளித்துள்ளார். குறிப்பாக, டில்லியும் வேண்டாம், பிண்டியும் (பாகிஸ்தான்) வேண்டாம், வங்கதேசமே முதன்மை என்று அவர் கூறியுள்ளார். பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட மாட்டோம் என்றும், தங்கள் நாட்டு விவகாரத்தில் பிற தலையீடுகளை அனுமதிக்க மாட்டோம் என்றும் பிஎன்பி (BNP) தலைவர் தாரிக் ரஹ்மான் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளார்.

பங்களாதேஷில் இந்த பொதுத்தேர்தல் இந்தியாவுக்கு சாதகமா? பாதகமா? என்ற கேள்விக்கு பதில் இலகுவாக இருக்க முடியாது. வழக்கமாக இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்ட ஜமாஅத்-இ-இஸ்லாமி, இந்த முறை வியக்கத்தக்க மாற்றமாக இந்தியாவுடன் நட்பு மற்றும் ஒத்துழைப்பு கொண்ட உறவை வளர்ப்போம் என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. சமத்துவம் மற்றும் பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் இந்தியா உட்பட அண்டை நாடுகளுடன் சுமுக உறவு பேணப்படும் என்று அக்கட்சியின் தலைவர் ஷபிகுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

### இந்துக்கள் - சிறுபான்மையின பாதுகாப்பு

வங்கதேசத்தில் சமீபகாலமாக இந்துக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில், பிஎன்பி கட்சி சிறுபான்மையினரின் உயிருக்கும், சொத்துக்களுக்கும், வழிபாட்டு தலங்களுக்கும் கடுமையான

தொடர்ச்சி▼





# பங்களாதேஷ் 2026 தேர்தல்: இளம் தலைமுறையின் கனவு நனவாகுமா?

தொடர்ச்சி▲

சட்டப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று அரசு உறுதியளித்துள்ளது.

இருப்பினும், ஜமாஅத்-இ-இஸ்லாமி கட்சி இது குறித்து தெளிவான வாக்குறுதிகளை அளிக்காமல், சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளாக ஷேக் ஹசீனாவுடன் நெருக்கமான உறவை வைத்திருந்த இந்தியாவுக்குத் தற்போதைய அரசியல் மாற்றம் ஒரு சவாலாகவே உள்ளது. இடைக்காலத் தலைவர் யூனுஸ் பாகிஸ்தானுடன் நெருக்கம் காட்டியது இந்தியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பெப்ரவரி 12 ஆம் திகதி அதாவது நாளை நடைபெறவுள்ள வாக்குப்பதிவின் முடிவில் 13 ஆம் திகதி வெளியாகும் முடிவுகள், தெற்காசியாவின் அரசியல் வரைபடத்தில் இந்தியாவின் செல்வாக்கை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக இருக்கும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

### இளம் தலைமுறைக் கட்சி

ஷேக் ஹசீனாவின் ஆட்சியை வீழ்த்திய மாணவர் தலைமையிலான புரட்சியை முன்னெடுத்த இளம் தலைமுறையினரால் தொடங்கப்பட்ட தேசிய நாரிக் கட்சி (NCP), அனுபவமின்மை மற்றும் உள்கட்சிப் பூசல்கள் காரணமாக ஜமாத்-இ-இஸ்லாமியுடன் கைகோர்த்துள்ளது.

இந்த முடிவு மாணவர் தலைவர்களிடையே பெரும் பிரிவினையை ஏற்படுத்தியுள்ளது. தஸ்னிம் ஜாரா போன்ற முக்கிய பெண் தலைவர்கள் கட்சியிலிருந்து வெளியேறவும் காரணமாகியுள்ளது. ஜமாத் கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்களில் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பது பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்தத் தேர்தல் பங்களாதேஷின் ஜனநாயகப் பாதையைத் தீர்மானிக்கும் ஒரு முக்கியமான மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது. ஹசீனா இல்லாத ஒரு புதிய பங்களாதேஷை உருவாக்குவதில் பழைய அரசியல் சக்திகள் வெற்றிபெறுமா அல்லது மாணவர்களின் கனவு நனவாகுமா என்பது நாளை தெரிந்துவிடும்.

### ஷேக் ஹசீனாவின் சரிவு

வங்கதேசத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்ற நிலையில், அதை அந்த நாட்டின் முக்கிய கட்சிகள் புறக்கணித்தன. இதனால், ஷேக் ஹசீனா வெற்றி பெற்று மீண்டும் பிரதமராக பதவியேற்றார். ஆனால், சில மாதங்களில் அரசுக்கு எதிராக மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். கடந்த 2024 ஆம் ஆண்டு, இட ஒதுக்கீடு முறையில் எழுந்த சிக்கலின் காரணமாக, அந்த நாட்டில் போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டம் வன்முறையாக மாறிய நிலையில், 1400 பொது மக்கள் கொல்லப்பட்டனர். மேலும், 22000 பேர் படுகாயமடைந்தனர். இந்த தொடர் போராட்டத்தின் காரணமாக அந்த நாட்டின் அதிபர் ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறினார். இந்த போராட்டம் குறித்து அந்த நாட்டின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் வழக்குப் பதிவு செய்தது, இந்த வழக்கில் ஷேக் ஹசீனா குற்றவாளி என்று உறுதி செய்து, அவருக்கு மரண தண்டனை விதித்தது.

போராட்டம் மிகத் தீவிரமாக நடைபெற்ற நிலையில், ஷேக் ஹசீனா பதவியை ராஜினாமா செய்துவிட்டு, இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். அதைத் தொடர்ந்து, பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டு, அது தற்போது செயல்பட்டு வருகிறது.

இந்த நிலையில், 2026 பெப்ரவரி மாதம் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. இது குறித்து அந்த நாட்டு அதிபர் ஷஹாபுதீனுடன், தேர்தல் ஆணைய அதிகாரிகள் ஆலோசனை நடத்தியிருந்தனர். ஆனாலும் தேர்தலில் போட்டியிட ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்கு, முகமது யூனுஸ் அரசு தடை விதித்துள்ளது. இதனால், அந்தக் கட்சியால் தேர்தலில் போட்டியிட முடியாது. இதையடுத்து, மற்றொரு முன்னாள் பிரதமர் கலிதா ஜியாவின் வங்கதேச தேசியவாத கட்சி, ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி இடையேதான் இந்த தேர்தலில் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதில் ஆணையம் உறுதியாக உள்ளது என்று தலைமை தேர்தல் ஆணையர் நஸீருதீன் தெரிவித்துள்ளார். தேர்தல் அட்டவணை அறிவிக்கப்பட்டதன் மூலம், நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஜனநாயக தேர்தல் நடைமுறையை நோக்கிய பயணத்தை வங்கதேசம் முறையாகத் தொடங்கியுள்ளது என்று கூறப்படுகிறது.

### சர்வதேச பார்வையாளர்கள்

இந்த தேர்தலில், மொத்தம் உள்ள 300 இடங்களுக்கு 2000 இற்கும் மேற்பட்டோர் போட்டியிட உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகின்றன. இதில் 50 கட்சிகள் பங்கேற்கின்றன என்று கூறப்படுகிறது. இந்த பொதுத் தேர்தலைப் பார்வையிட அந்த நாட்டு அரசு இந்தியா உட்படப் பல நாடுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

வங்கதேச அரசு இந்தியாவுக்கும் அழைப்பு விடுத்துள்ள நிலையில், இந்தியா தனது பார்வையாளர் குழுவை அனுப்புவது பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இருப்பினும், கடந்த 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் இருந்த பார்வையாளர்களின் எண்ணிக்கையை விட இந்த ஆண்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும் என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி▼

# பங்களாதேஷ் 2026 தேர்தல்: இளம் தலைமுறையின் கனவு நனவாகுமா?

**தொடர்ச்சி▲**

இந்த அழைப்பை ஏற்று இதுவரை 330 சர்வதேச பார்வையாளர்கள் வருகைதர உள்ளனர் என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. குறிப்பாக இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட ஆறு சர்வதேச அமைப்புகள் வங்கதேசத்துக்கு வருகை தர உள்ளன என்று தகவல்கள் வெளியாகின்றன. அதே நேரத்தில், 16 நாடுகள் மற்றும் பல்வேறு சர்வதேச அமைப்புகளில் உள்ள தனி மனிதர்கள் எனப் பலரும் வருகை தரவுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள் ளன.

## ஈழத் தமிழினத்தை தேசிய இனமாக ஏற்கவேண்டும் தமிழர் தேசம் மலரும்வரை போராட்டம் தொடரும்!

### பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை மக்கள் பேரெழுச்சியின் 5 ஆம் ஆண்டு நிறைவு அறிக்கையில் தெரிவிப்பு

இனப் பிரச்சினை தொடர்பில் மத்தியஸ்தம் வகிக்க விரும்பும் எந்த நாடும், இந்த விடயத்தில் தமது நடுநிலைமையை வெளிப்படுத்தும் விதத்தில், ஈழத் தமிழினத்தை ஓர் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை மக்கள் பேரெழுச்சியின் 5 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் தலைவர் அருட்பணி து. ஜோசப்மேரி, தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகியோர் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டுவரை வீறுநடை போட்ட தமிழ் மக்களின் விடுதலை போராட்டம், அநீதியாலும் துரோகத்தாலும் வீழ்த்தப்பட்ட பின், ஈழத்தமிழினம் உரிமையை கைவிட்டு அபிவிருத்தியையே கேட்டு நிற்கின்றது என்ற பொய்ப் பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்ட நேரத்தில்தான், வீழ்ந்து கிடந்த ஈழத்தமிழினம் வீறுகொண்டெழுந்து உரிமை குரல் எழுப்பி நின்ற ஓர் உன்னத நிகழ்வே பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையான மக்கள் பேரெழுச்சி.

எமது தேசிய கவிஞன் புதுவை இரத்தினதுரையின் எண்ணத்தில் உதித்த "பொத்துவில் தொடக்கம் பொலி கண்டி வரை" கவிவரிகளை தாங்கிய மக்கள் எழுச்சி, தென் தமிழீழத்தின் அந்தமான பொத்துவில் தொடக்கம் வட தமிழீழத்தின் இறுதி எல்லையான பொலிகண்டிவரை வீறுநடை போட்டது.

வடக்கு – கிழக்கு எங்கும் இராணுவத்தையும் புலனாய்வாளர்களையும் குவித்து, திறந்த சிறைச்சாலையாக தமிழ் மக்களை ஒடுக்கி விட்டோம் என இறுமாந்திருந்த சிங்கள அரசின் முகத்தில் அறைந்த நிகழ்வே இதுவாகும். சலுகைக்காக உரிமையை விற்கும் மக்கள் நாம் அல்ல என்பதை சர்வதேசத்துக்கு உரத்துக் கூறியதும் இந்த எழுச்சியே.

இந்த மக்கள் பேரெழுச்சியின் தொடர்ச்சியாகப் பிறப்பெடுத்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்த ஐந்து ஆண்டுகளில் சிங்கள தேசத்தில் அரசுகள் மாறி உள்ளன. சிங்கள தேசத்தின் இரண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் மாறி மூன்றாவது ஜனாதிபதி இன்று அதிகாரத்தில் உள்ளார். ஆனால் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பின் நிகழ்ச்சி நிரல் எவ்வித இடைவெளியும் இல்லாது அதே வேகத்துடனே தொடர்கின்றது. இன்று மீண்டும் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எனும் பெயரில் ஈழத்தமிழினத்தை மீண்டும் ஏமாற்றும் வேலைத் திட்டங்கள் எம்முன்னே அரங்கேறுகின்றன. ஈழத்தமிழினம் மீண்டும் ஒருமுறை ஏமாறுவதற்குத் தயாராக இல்லை. அதன் அடிப்படையில், எம்முன்னே விரிக்கப்படும் சதி வலையை எதிர்கொள்ள கீழ்வரும் விடயங்களை முன்வைக்கின்றோம்.

இனப்பிரச்சினை தொடர்பில் ஸ்ரீலங்கா அரசும் சிங்கள தேசமும் இதய சுத்தியுடன் முன்னெடுப்புகளை மேற்கொள்வதாயின், அதன் முன்னோடியாக,

1. வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவம் அகற்றப்பட்டு, தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை திரும்ப வேண்டும்.

2. தமிழினத்தின் மீது நிகழ்த்தப்பட்ட இனவழிப்பை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளான சர்வதேச குற்றங்களை சர்வதேச பொறிமுறை மூலம் விசாரணைக்கு அனுமதிக்க வேண்டும்.

3. தமிழர் தாயகத்தில் அரச அனுசரணையுடன் நடைபெறும் பௌத்த மயமாக்கலும், நில அபகரிப்பும் உடனடியாக நிறுத்தப்பட்டு, சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரைகள் அகற்றப்பட்டு, அடாத்தாக கையகப்படுத்தப்பட்ட தமிழர் நிலங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

4. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுவதுடன், அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

5. ஆறாம் திருத்தச் சட்டம் நீக்கப்பட்டு தமிழ் மக்களின் அரசியல் வெளி உருவாக்கப்பட வேண்டும்.

அத்துடன் இனப் பிரச்சினை தொடர்பில் மத்தியஸ்தம் வகிக்க விரும்பும் எந்த நாடும், இந்த விடயத்தில் தமது நடுநிலைமையை வெளிப்படுத்தும் விதத்தில்,

1. ஈழத் தமிழினத்தை ஓர் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. ஈழத்தமிழினத்தின் மீது ஸ்ரீலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பை அங்கீகரிக்க வேண்டும்.

அத்துடன் இனப் பிரச்சினைக்கான எந்தவொரு நிரந்தர தீர்வும் ஈழத்தமிழ் மக்களிடம் சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும்பொதுவாக்கெடுப்பினூடாக தீர்மானிக்கப்பட வேண்டும். இதுவே இத்தீவில் நிரந்தர அமைதிக்கு வழியை ஏற்படுத்தும்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை மக்கள் பேரெழுச்சியின் உறுதிமொழியான, தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான, மரபுவழித் தாயகம் – சுயநிர்ணய உரிமை – தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அத்துடன் தமிழ் இனத்தின் மீது மேற்கோள்ளப்பட்ட, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இன அழிப்புக்குச் சர்வதேச நீதி வேண்டும் என்பதை மீண்டும் நினைவுறுத்துவதுடன், தமிழர் தேசம் மலரும்வரை எமது போராட்டம் தொடரும் என்று உறுதி எடுத்துக் கொள்கின்றோம். – என்றுள்ளது.

# பணத்தினை மட்டுமே நம்பி தேர்தலை சந்திக்கும் தி.மு.க.

## அன்புமணி குற்றச்சாட்டு



"தமிழகத்தில் சுதந்திரத்துக்கு பிறகு இருந்த 12 முதல்வர்களில் மிகவும் மோசமானவர் மு.க.ஸ்டாலின். அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறுவது உறுதி."

– இவ்வாறு பா.ம.க. இளைஞரணி பொதுக்குழு கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

பா.ம.கவின் இளைஞரணி பொதுக்குழுக் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. திடலில் நேற்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் அன்புமணி உரையாற்றுகையில்,

"தமிழகத்தில் திமுக மீண்டும் ஆட்சியை பிடிக்க கூடாது. அதற்காகத் தான் தமிழகம் முழுவதும் தி.மு.கவின் அவல ஆட்சியை அம்பலப்படுத்தினேன். பணத்தை மட்டுமே நம்பி தி.மு.க. இந்த தேர்தலை சந்திக்கிறது. இளைஞர்களால் எத்தனையோ நாடுகளில் பல புரட்சிகள் நடைபெற்றிருக்கிறது. தமிழகத்திலும் அதுபோன்ற ஒரு புரட்சி நடக்கும். தமிழகத்தில் அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் நாம் இணைந்திருக்கிறோம். குறைந்தது 200 தொகுதிகளில் இந்த கூட்டணி வெற்றி பெறுவது உறுதி. தி.மு.க. ஒற்றை இலக்கத்தில் வெற்றி பெறும்.

அரசு ஊழியர்கள் உட்பட அனைத்து தரப்பு மக்களும் தி.மு.க. ஆட்சியின் மீது கடும் கோபத்தில் இருக்கிறார்கள். அனைவருக்கும் முதல்வர் ஸ்டாலின் துரோகம் செய்துள்ளார். தி.மு.க. ஏதாவது ஒரு அறிவிப்புகளை முதல்வர் வெளியிட்டு கொண்டிருக்கிறார். உங்கள் கனவை சொல்லுங்கள் என்று ஒரு திட்டத்தை தி.மு.க. அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. பா.ம.கவினர் அனைவரும், அந்த இணையதளத்திற்கு உள்ளே சென்று உங்கள் மனதில் என்னென்ன தோன்றுகிறதோ அதை கட்டாயம் பதிவிடுங்கள். கெட்ட வார்த்தையை பதிவிட வேண்டாம்.

பணத்தை வைத்து வெற்றி பெற்றுவிடலாம் என தி.மு.கவினர் மிதப்பில் இருக்கிறார்கள். தமிழகத்தில் சுதந்திரத்துக்கு பிறகு 12 முதல்வர்கள் இருந்துள்ளனர். அவர்களில் மிக மிக மோசமான முதல்வர் என்றால் அது மு.க.ஸ்டாலின் தான். தி.மு.க. ஆட்சியை பார்த்து இன்றைக்கு மக்கள் மட்டும் அல்ல, அவர்கள் கூட்டணியில் இருக்கக்கூடிய கூட்டணி கட்சிகளே கடும் வெறுப்பில் இருக்கிறார்கள். தி.மு.க. கூட்டணியில் இருப்பவர்கள் யாரும் தி.மு.கவுக்கு ஆதரவாக வேலை செய்ய போவது கிடையாது. அவர்களே தோற்கடித்து விடுவார்கள். தமிழக தேர்தல் களம், அ.தி.மு.க. கூட்டணிக்கு சாதகமாக உள்ளது. அ.தி.மு.க. கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும். இனிமேல் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வர முடியாது." என்று தெரிவித்துள்ளார்.

# பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தமிழகத்தில் 33 சதவீதம் அதிகரிப்பு

## வானதி சீனிவாசன் குற்றச்சாட்டு



தமிழகத்தில் நடைபெற்று வரும் தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 33 சதவீதம் அதிகரித்துள்ளன என்று பா.ஜ.க. மூத்த தலைவரும் எம்.எல்.ஏவுமான வானதி சீனிவாசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழகத்தில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்கொடுமை, சட்ட ஒழுங்கு சீர்கேடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் தமிழக அரசு அலட்சியம் காட்டி வருவதாக தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் மகளிர் அணி சார்பில் தமிழகம் முழுவதும் 38 மாவட்டங்களில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு பா.ஜ.க. தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் தலைமை தாங்கினார். அ.தி.மு.க. மகளிர் அணி மாநில செயலாளர் வளர்மதி, அமைப்புச் செயலாளர் கோகுல இந்திரா, பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் நடிகை குஷ்பு, மகளிர் அணி மாநிலத் தலைவர் கவிதா ஸ்ரீகாந்த் மற்றும் த.மா.கா, பா.ம.க, அ.ம.மு.க. உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வானதி சீனிவாசன் உரையாற்றுகையில்,

"எம்.ஜி.ஆர், ஜெயலலிதா மற்றும் பழனிசாமி ஆட்சி வரை, தமிழகத்தின் ஒவ்வொரு பெண்ணும் இது நமக்கான ஆட்சி என்று நிம்மதியாக இருந்தார்கள். ஆனால், இன்று 'திராவிட மாடல்' என்று மார்தட்டிக் கொள்ளும் இந்த ஆட்சியில், பல்கலைக்கழகங்கள் முதல் பேருந்து நிறுத்தங்கள் வரை எங்குமே பெண்களுக்குப் பாதுகாப்பில்லாத சூழல் நிலவுகிறது.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 33 சதவீதம் அதிகரிப்பு. குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள் 52 சதவீதம் உயர்வு, குடும்ப வன்முறை வழக்குகள் 63 சதவீதம் அதிகரிப்பு, பாலியல் குற்றங்கள் 109 சதவீதம் உயர்ந்து தமிழகத்தைப் பின்னோக்கித் தள்ளியுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டைச் சட்டமாக்கினால், இங்கே ஸ்டாலின் ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 33 சதவீதம் அதிகரித்துள்ளன. இந்த 2026 ஆம் ஆண்டில் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, இதே இடத்தில் நாம் வெற்றி விழாவைக் கொண்டாட வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

இதன்போது நடிகை குஷ்பு பேசும் போது,

"அ.தி.மு.க. ஆட்சியில் ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித்தொகையும், தாலிக்கு தங்கம் திட்டமும் நடைமுறையில் இருந்தது. அந்தத் திட்டம் இன்று முடக்கப்பட்டுள்ளது. 'போதும்டா சாமி உங்கள் ஆட்சி' என்று மக்கள் சொல்லும் நேரம் வந்துவிட்டது." – என்றார்.



# எரிபொருள் தட்டுப்பாட்டால் முடங்கும் கியூபா: அமெரிக்க நடவடிக்கைக்கு ரஷ்யா கண்டனம்

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கியூபா முடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக ரஷ்யா எச்சரித்துள்ளதுடன், அமெரிக்காவின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

தென் அமெரிக்க நாடான கியூபா, தனது அண்டை நாடான வெனிசுவேலாவிலிருந்து குறைந்த விலையில் கச்சா எண்ணெய்யைப் பெற்று வந்தது. அதற்கு ஈடாக பாதுகாப்பு, மருத்துவம் மற்றும் கல்விச் சேவைகளை கியூபா வழங்கி வந்தது.

சமீபத்தில், வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியாவை அமெரிக்க இராணுவம் கைது செய்து நியூயோர்க் சிறையில் அடைத்ததைத் தொடர்ந்து, வெனிசுவேலாவின் எண்ணெய் சந்தை அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

வெனிசுவேலாவிலிருந்து கியூபாவுக்கு வழங்கப்பட்டு வந்த கச்சா எண்ணெய்யை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிறுத்தியுள்ளார்.

மேலும், கியூபாவுக்கு எண்ணெய் வழங்கும் ஏனைய நாடுகளுக்கு வரி விதிக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

ஏற்கனவே கியூபா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள நிலையில், இந்த நடவடிக்கை அந்நாட்டை கடும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

இதனால் விமானம் மற்றும் இதர போக்குவரத்து சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

நிலைமையைச் சமாளிக்க அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை 4 நாள்களுக்கு மூட கியூபா அரசு உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்தச் செயலால் கியூபாவின் எரிசக்தி நிலைமை மோசமடைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள ரஷ்யா, கியூபாவுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

அதேபோல், மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம், அமெரிக்காவின் வரி எச்சரிக்கைகளுக்கு அஞ்சாமல் கியூபாவுக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரும் இந்தச் சூழல் குறித்துத் தனது வருத்தத்தைப் பதிவு செய்துள்ளார்.



# பங்களாதேஷில் வர்த்தகர் கொலை; இந்துக்களை பாதுகாக்க வலியுறுத்தல்






பங்களாதேஷில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில், இந்து வர்த்தகர் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

பங்களாதேஷில் நாளை பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. பிரதமர் பதவியில் இருந்து ஷேக் ஹசீனா விலகிய பிறகு நடந்த வன்முறை சம்பவம் மற்றும் தாக்குதல்களில் இந்துக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில், மைமென்சிங் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இந்து அரிசி வர்த்தகர் சுஷேன் சந்திர சர்க்கார் (வயது 62) கொடூரமான முறையில் மர்ம நபர்களால் கொல்லப்பட்டுள்ளார். இது குறித்து பொலிஸ் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில் 'இந்துக்கள் மனித உரிமை' என்ற அமைப்பு ஐ.நா. மற்றும் பல்வேறு நாடுகளுக்கு கடிதம் அனுப்பி உள்ளது. அதில் 15 நாடுகளைச் சேர்ந்த சர்வதேச மனித உரிமை அமைப்புகள், மத அமைப்புகள், சமூக அமைப்புகள் கையெழுத்திட்டுள்ளன.

அந்தக் கடிதத்தில் கூறியிருப்பதாவது:

"பங்களாதேஷில் யூனுஸ் தலைமையிலான இடைக்கால நிர்வாகத்தின் கீழ், இந்துக்களுக்கு எதிராக தொடர்ந்து அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. திட்டமிட்டு இந்துக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது.

இந்த விவகாரத்தில் ஐ.நா. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பங்களாதேஷ் இந்துக்களைப் பாதுகாக்க வேண்டும். ஐ.நா. உட்பட உலக நாடுகள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி தீர்வுள்ள ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# டொனால்ட் ட்ரம்ப் குறித்த வாக்குவாதம்: பெற்ற மகளையே சுட்டுக்கொன்ற தந்தை





அமெரிக்காவிற்குச் சுற்றுலா சென்ற பிரிட்டிஷ் இளம்பெண் ஒருவர், தனது தந்தையுடன் ஏற்பட்ட அரசியல் மோதலால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டனின் வாரிங்டன் பகுதியைச் சேர்ந்த 23 வயது லூசி ஹாரிசன், கடந்த ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள தனது தந்தை கிறிஸ் ஹாரிசனின் வீட்டிற்குச் சென்றிருந்தார். அப்போது அவர் மார்பில் சுடப்பட்டு உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பான மரண விசாரணை, தற்போது செஷையர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இதில் லூசியின் காதலர் சாம் லிட்லர் அளித்துள்ள வாக்குமூலம் பல உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

சம்பவம் நடந்த அன்று காலை, லூசிக்கும் அவரது தந்தைக்கும் இடையே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறித்து கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. ட்ரம்ப் இரண்டாவது முறையாகப் பதவியேற்கத் தயாராகிக் கொண்டிருந்த சமயம் அது.

பாலியல் அத்துமீறல்கள் மற்றும் துப்பாக்கி கலாச்சாரம் குறித்து லூசி கேட்ட கேள்விகளுக்கு, கிறிஸ் ஹாரிசன் அலட்சியமாகப் பதிலளித்ததாகக் கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த லூசி அழுதுகொண்டே தனது அறைக்குச் சென்றுள்ளார்.

அன்று மாலை லூசி லண்டன் திரும்ப வேண்டியிருந்தது. விமான நிலையத்திற்குப் புறப்படுவதற்குச் சற்று முன்பு, கிறிஸ் தனது மகளைத் தனியாக ஒரு அறைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அடுத்த சில நொடிகளில் துப்பாக்கிச் சத்தம் கேட்டது.

கிறிஸ் ஹாரிசன் தரப்பில் அளிக்கப்பட்ட விளக்கத்தில், அவர்கள் இருவரும் துப்பாக்கிச்சூடு குறித்த செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும், அப்போது தன்னிடம் இருந்த துப்பாக்கியைக் காட்ட முயன்றபோது அது தவறுதலாக வெடித்ததாகவும் கூறியுள்ளார்.

தான் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகி மீண்டு வந்தவர் என்றும், அன்று உணர்ச்சி வசப்பட்டு மீண்டும் மது அருந்தியிருந்ததாகவும் கிறிஸ் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து டெக்சாஸ் பொலிஸார் விசாரணை நடத்தினர். இருப்பினும், கிறிஸ் ஹாரிசனுக்கு எதிராகப் போதிய ஆதாரங்கள் இல்லை எனக் கூறி அமெரிக்க நீதிமன்றம் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்தது. இதனால் அவர் மீது குற்றவியல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு இன்று புதன்கிழமை வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கனடா முரசு


பக்கங்கள் - 03

புதன்கிழமை 11/02/2026

## கனடாவில் வீட்டு வாடகை 16ஆவது மாதமாக சரிவு




C2▶




# பாடசாலையில் துப்பாக்கிச் சூடு சந்தேக நபர் உட்பட 10 பேர் பலி

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள ஒரு உயர்நிலைப் பாடசாலையிலும், ஒரு குடியிருப்புப் பகுதியிலும் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் சந்தேகத்திற்குரிய துப்பாக்கிதாரியும் அடங்குகிறார் என கூறப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.20 மணியளவில் டம்ளர் ரிட்ஜ் மேல்நிலைப் பாடசாலையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக வந்த தகவல்களின் பேரில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

C2▶


# கனடாவில் பரீட்சையில் மோசடி; உதவிய ஆசிரியைக்கு தண்டனை

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில், மாகாண அளவிலான பரீட்சையில் மாணவர்களுக்கு மோசடி செய்ய உதவிய உயர்நிலைப் பள்ளி ஆசிரியையொருவருக்கு 5 நாள் இடைநீக்கம் விதிக்கப்பட்டுள்ளது.

பி.சி. ஆசிரியர் ஒழுங்குமுறை ஆணையருடன் மேற்கொள்ளப் பட்ட இணக்கப்பாட்டு தீர்மானத்தின் அடிப்படையில், டாஷா டான் விட்னி தன்னுடைய தவறுகளை ஒப்புக் கொண்டு தண்டனையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்த தீர்மானம் கடந்த செவ்வாய்க் கிழமை இணையத்தில் வெளி யிடப்பட்டது.






# கனடாவில் வீட்டு வாடகை 16ஆவது மாதமாக சரிவு

கனடாவில் கேட்கப்படும் வீட்டு வாடகை ஜனவரி மாதத்தில் 2 வீதம் குறைந்து சராசரியாக 2,057 டொலராக பதிவாகியுள்ளது.

இது தொடர்ந்து 16 ஆவது மாதமாக வாடகை வீதம் குறைந்திருப்பதை காட்டுகிறது. ஜனவரியில் வாடகை கடந்த 31 மாதங்களில் இல்லாத அளவுக்கு குறைந்த நிலையில் இருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பை விட 6.3 வீதம் குறைந்திருந்தாலும், கொவிட் 19 தொற்றுநோய்க்கு முன்பிருந்த நிலையை விட இன்னும் 12.9 வீதம் அதிகமாகவே உள்ளது.

வாடகை குறைவு மற்றும் சந்தை மந்த நிலை காரணமாக வீடு வாடகைக்கு எடுப்போரின் சுமை சற்றே குறைந்துள்ளது.

ஜனவரியில் சராசரி 'வாடகை-வருமான விகிதம்' ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக 30 வீதத்துக்கும் கீழே சரிந்துள்ளது. வாடகையாளர்களுக்கு வசிப்புத்தகுதி கணிசமாக மேம்பட்டுள்ளது.

அதிக வழங்கல் விலைகளை குறைக்கிறது என்பதற்கான சான்று இது என ருசடியயெவழைெ நிறுவனத் தலைவர் ஷான் ஹில்டெபிராண்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் வாடகை வீடுகளின் சராசரி பரப்பளவு குறைந்ததும் வாடகை வீழ்ச்சிக்கு காரணமாக இருந்துள்ளது.

ஜனவரியில் வாடகை பட்டியலிடப்பட்ட வீடுகளின் சராசரி பரப்பளவு 857 சதுர அடியாக இருந்தது.

இது கடந்த ஆண்டு 885 சதுர அடியாக இருந்ததை விட குறைவா-கும். வாடகை தொடர்ந்து குறைந்தாலும், தொற்றுநோய்க்கு முன்பிருந்த நிலையை விட விலைகள் இன்னும் உயர்ந்தே உள்ளன.

இருப்பினும், அதிக வீட்டு வழங்கல் மற்றும் சந்தை சீராக்கம் காரணமாக 2026 ஆம் ஆண்டில் வாடகையாளர்களுக்கு சற்று நிம்மதி கிடைக்கும் என நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.

---

**பாடசாலையில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது அங்கு 7 பேர் இறந்து கிடந்தனர், பலர் காயமடைந்த நிலையில் காணப்பட்டனர்.

மற்றொருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் போது உயிரிழந்தார்.

துப்பாக்கிச் சூட்டில் கடுமையான காயங்களுக்கு உள்ளானவர்கள் மீட்கப்பட்டு விமானம் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் சுமார் 25 பேர் உள்ளூர் மருத்துவ மையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக நம்பப்படும் ஒரு வீட்டில் மேலதிகமாக இரண்டு பேர் இறந்து கிடந்தனர் என பொலிஸார் ஒரு அறிக்கையில் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் வேறு யாராவது காயமடைந்திருக்கலாமா அல்லது வேறுவிதமாக தொடர்புடையவரா என்பதைத் தீர்மானிக்க வீடுகள் மற்றும் அந்தப் பகுதிகளில் அதிகாரிகள் மேலும் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனினும், துப்பாக்கிச் சூட்டில் பாதிக்கப்பட்டவர்களில் எத்தனை பேர் மாணவர்கள் அல்லது பெரியவர்கள் என்பது குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

டம்ளர் ரிட்ஜ் மேல்நிலைப் பாடசாலையில் 7 முதல் 12 ஆம் வகுப்பு வரை 175 மாணவர்கள் கல்வி பயிலுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் டொரோண்டோவில் 06 பேர் கைது

டொரோண்டோ பெரும்பாக பகுதியைச் சேர்ந்த 06 பேர், சிறுவர் பாலியல் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாலியல் செயற்பாடுகளுக்காக சிறார்களுடன் சந்திப்புகளை ஏற்பாடு செய்ததாகக் இந்த நபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

புரொஜெக்ட் பயர்பேர்ட் எனப்படும் சிறப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டம், சிறுவர் துஷ்பிரயோக குற்றங்களை தடுக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில், தாங்கள் தொடர்பு கொண்டிருந்தவர்கள் சிறார்கள் என்பதை அறிந்திருந்த போதிலும், பலர் சந்திப்புகளை ஏற்பாடு செய்தனர் என விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸ் தெரிவித்துள்ளது.




# அவசர ரத்தத் தேவைகள் கனடாவில் அதிகரித்தன

கனடா முழுவதும் ரத்தம் மற்றும் பிளாஸ்மா தானங்களுக்கு அவசரத் தேவை ஏற்பட்டுள்ளதாக கனடிய இரத்த வங்கி அறிவித்துள்ளது.

குளிர்கால காலநிலை மற்றும் பருவ நோய்கள் காரணமாக ரத்த சேகரிப்பு பாதிக்கப்பட்டுள்ளது என அந்த அமைப்பின் வணிக மேம்பாட்டு மேலாளர் கேட்டி பியா தெரிவித்துள்ளார்.

இதன் தாக்கம் உள்ளூர் ரத்த தான மையங்களில் பெரிதும் உணரப்படுகிறது. “கிச்சனர – வாட்டர்லூ பகுதியில் மட்டும் 500-க்கும் மேற்பட்ட முன்பதிவு நேரங்கள் காலியாக உள்ளன,” என அவர் கூறினார்.

குளிரால் வீதிகள் பனியால் வழுக்கலாக இருப்பதும், விபத்துகள் அதிகரிப்பதும் மருத்துவமனைகளில் ரத்தத் தேவையை உயர்த்தியுள்ளது.

அதே சமயம், பலர் முன்பதிவுகளை ரத்து செய்வதோ, நேரத்திற்கு வராததோ காரணமாக ரத்த சேகரிப்பு குறைந்துள்ளது. முன்பதிவுகள் குறைந்துள்ளன.

மேலும் பனிச்சாலைகள் காரணமாக விபத்துகள் அதிகரிக்கின்றன.

இதனால் மருத்துவமனைகளுக்கு அதிக ரத்தம் தேவைப்படுகிறது என பியா விளக்கினார்.

எந்த ரத்த வகையினருக்கும் கொடுக்கக்கூடிய ஓ –நெகட்டிவ் ரத்தம் மிகவும் அவசியமாக தேவைப்படுவதாக அமைப்பு தெரிவித்துள்ளது.

தகுதியுள்ள அனைவரும் வந்து ரத்த தானம் செய்ய வேண்டும். அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய இது அவசியம் என்று பியா கேட்டுக்கொண்டார்.